**மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.**

சட்டமன்றப் பேரவையின் புதிய உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தையும் மனமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பதினைந்தாவது சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரில் தொடக்க உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். முப்பத்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆளும் கட்சியை மீண்டும் தேர்ந்தெடுத்து, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை தமிழக மக்கள் அளித்துள்ளனர். தமிழக மக்கள் தங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை, நீங்கள் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்து, அவர்களின் முன்னேற்றத்திற்காகவும், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் அயராது பாடுபடுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

2. **மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் தலைமையின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை தமிழக மக்கள் மீண்டும் நிலைநிறுத்தி, அவர்களின் தலைமையிலான அரசை தொடர்ந்து ஆட்சியில் அமர வைத்துள்ளனர். அவர்களின் தலைமையில் இந்த அரசு செயல்படுத்திவரும் மக்கள் நலம் காக்கும் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் தமிழக மக்கள் வழங்கி வரும் ஆதரவை, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளதோடு, நாட்டிலேயே **முதன்மை மாநிலம்** என்ற நிலையினை நோக்கி தமிழ்நாடு தொடர்ந்து முன்னேறவும் வழிவகுத்துள்ளது. மாநிலத்தில் **அமைதி, வளம், வளர்ச்சி** என்ற இலக்கினை எய்திட இந்த அரசு தொடர்ந்து பாடுபடும். இந்த நோக்குடன் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் பல்வேறு கொள்கைகளையும் திட்டங்களையும் வடிவமைத்து இந்த அரசு செயல்படுத்தும்.

**3.** தேர்தல் அறிக்கையில் உறுதியளித்துள்ள பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைந்து செயல்படுத்தும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக, ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே முக்கிய ஐந்து வாக்குறுதிகளை நிறைவேற்ற, இந்த அரசு ஆணைகளை வெளியிட்டுள்ளது.

- **சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் தள்ளுபடி**
- **அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம்**
- **திருமண உதவித் திட்டங்களின் கீழ், திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் நான்கு கிராமிலிருந்து எட்டு கிராமாக உயர்வு**
- **கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்டுகளாகவும்,**

**விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்டுகளாகவும் உயர்வு**

- **டாஸ்மாக் மூலம் நடத்தப்படும் மதுபானக் கடைகள் திறந்திருக்கும் நேரத்தைக் குறைத்ததுடன், 500 கடைகளை மூடவும் ஆணை**

என ஐந்து அரசாணைகள் உடனடியாக வெளியிடப்பட்டுள்ளன.

**4.** அரசு நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்த உறுதிகொண்டுள்ள இந்த அரசு, லோக்பால் சட்டத்தில் குறிப்பிட்ட சட்டத் திருத்தங்களுக்கு பாராளுமன்றம் சட்டம் இயற்றியவுடன், உரிய சட்ட வரைமுறையை வகுத்து, தமிழ்நாட்டில் லோக் ஆயுக்தா என்ற அமைப்பை நிறுவும்.

**5.** நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான வரி விதிக்கும் அதிகாரங்கள் மத்திய அரசிடம் அதிகமாகக் குவிந்துள்ள நிலையில், இன்றியமையாத பல

பொதுச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கான பொறுப்பும் கடமையும் மாநிலங்களிடமே உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். நிதி ஆதாரப் பகிர்வு மத்திய அரசுக்கு சாதகமாக இருக்கக்கூடிய இச்சூழ்நிலையில், ஏற்றுள்ள பொறுப்புகளுக்கு போதிய நிதி ஆதாரங்களின்றி மாநில அரசு செயல்பட வேண்டியுள்ளது. எனவே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக மத்திய அரசுடன் இணைந்து செயல்படும் அதே வேளையில், மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கிடையே நியாயமான நிதிப் பகிர்வுமுறை கடைபிடிக்கப்பட வேண்டும் என இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

**6.** மத்திய அரசின் ஆட்சி மொழியாகவும், சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாகவும் தமிழ்மொழியினை அறிவிக்க இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். விருதுகளை நிறுவியும் மணிமண்டபங்களை அமைத்தும் தமிழ்க் கலைஞர்களை

இந்த அரசு தொடர்ந்து சிறப்பிக்கும். தமிழ்ச் சமுதாயத்தின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்திருக்கும் ஜல்லிக்கட்டின் மீதான தடையை அகற்ற, இந்த அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும்.

7. மாநிலங்களுக்கிடையே உள்ள நதிநீர்ப் பிரச்சினைகளில், தமிழ்நாட்டின் நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பதில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளார்ந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தி அவர்கள் படைத்த சாதனையை மேலும் வலுப்படுத்த, அந்த அணையின் முழுக் கொள்ளளவான 152 அடிக்கு நீர்மட்டத்தை உயர்த்தி, தென்தமிழக விவசாயிகளின் வளத்தைப் பெருக்க, அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். காவேரி நதிநீர் ஆணையத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து,

மாநிலத்தின் சட்டப்பூர்வ உரிமைகளை நிலைநாட்டியது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மற்றுமொரு மகத்தான சாதனையாகும். காவேரி நதிநீர் ஆணையத்தின் இறுதித் தீர்ப்பினை முழுமையாக அமல்படுத்த, காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் விரைவில் அமைப்பதற்கான உச்ச நீதிமன்றத்தின் ஆணையைப் பெற, இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**8.** நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்வதற்காக, இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும். நீர்நிலைகளையும் ஏரிகளையும் சீரமைத்து அவற்றின் கொள்திறனை மேம்படுத்துவதற்காக, ‘நீர்வள நிலவளத் திட்டத்தின்’ (Irrigated Agriculture Modernisation and Water bodies Restoration and Management) இரண்டாம் கட்டப் பணிகளைச் செயல்படுத்த, உலக வங்கியின் நிதியுதவியை இந்த அரசு

பெற்றுள்ளது. பருவநிலை மாற்றத்தால் காவேரி பாசனப் பகுதியில் ஏற்படக்கூடும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான, 'பருவநிலை மாற்றத் தழுவல்' திட்டத்திற்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியையும் இந்த அரசு பெற்றுள்ளது. அதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

**9.** இருபத்து நான்கு மணிநேரமும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளித்து, மக்களின் குறைகளைத் தீர்க்கும் சிறப்பான அமைப்பாக 'அம்மா அழைப்பு மையம்' உருவெடுத்துள்ளது. இந்த அமைப்பு, மேலும் வலுப்படுத்தப்படும். மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள பொதுச் சேவை மையங்கள், பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் அரசின் சேவைகளை அளித்து வருகின்றன. இச்சேவைகளை மேலும் வலுப்படுத்த, தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனம்,

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கிராமப்புற வறுமை ஒழிப்புக் குழுக்கள் ஆகியவற்றால் நடத்தப்படும் பொதுச் சேவை மையங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அனைத்து அரசுத் துறைகளின் சேவைகளும் மக்களுக்கு எளிதில் சென்றடைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொதுச் சேவைகள் மக்களிடம் எளிதில் சென்றடைவதற்கான இத்தகைய முன்முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

**10.** அண்மையில் பெய்த பலத்த மழையாலும் பெருவெள்ளத்தாலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக, சென்னை மாநகரிலும் சில கடலோர மாவட்டங்களிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் பல்வேறு அரசு அமைப்புகள் மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கைகளால், பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் ஆறுதல் பெற்றதுடன், இயல்பு வாழ்க்கைக்கும் விரைவாகத் திரும்பினர். வரும் காலங்களில் இதுபோன்ற

வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை நிரந்தரமாகத் தணிக்க, சென்னையிலும், பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய கடலோர மாவட்டங்களிலும் விரிவான வெள்ளத் தடுப்புத் திட்டங்களை இந்த அரசு விரைவாகத் தயாரிக்கும்.

**11.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணிவுமிக்க நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் சமூகவிரோத சக்திகள் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளன. இணையதளம் மூலம் நடைபெறும் குற்றங்கள் உள்ளிட்ட, அனைத்துக் குற்றங்களையும் திறம்படக் கையாள்வதற்காக, நவீன கருவிகள் மற்றும் இதர வசதிகள் காவல் துறைக்கு வழங்கப்பட்டு, அதன் செயல்திறன் மேலும் வலுப்படுத்தப்படும். காவல் துறையினரின் ஊக்கம் தொடர்ந்து உன்னத நிலையில் இருக்கும் வகையில், குற்றங்களையும், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளையும் அவர்கள் தொடர்ந்து சுதந்திரத்துடன் கையாள்வதற்கு உரிய வழிவகை செய்யப்படும். பொது அமைதியை நிலைநாட்டி, தமிழ்நாட்டை அமைதிப்

பூங்காவாகத் திகழச் செய்ய இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து எடுக்கும்.

**12.** இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதும் பெரும் முக்கியத்துவத்தை அளித்து வருகிறார்கள். ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையம் போன்ற சர்வதேச அமைப்புகளின் மூலமாக இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டங்களில், அப்பாவித் தமிழர்களின் மீது போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை புரிந்தவர்களை அக்குற்றங்களுக்குப் பொறுப்பேற்கச் செய்ய, இந்த அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கும், பிற குடிமக்களைப் போன்று, சம உரிமைகளும் வசதி வாய்ப்புகளும் கிடைப்பதை உறுதிசெய்ய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**13.** இந்த அரசு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதன் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்ட ‘தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**’ ஆவணத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலட்சிய இலக்குகளை நோக்கி தமிழ்நாட்டை இட்டுச் செல்வதற்கு மேலும் ஒரு அரிய வாய்ப்பு இந்த அரசுக்கு கிடைத்துள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்தை அளிப்பதில் உறுதிகொண்டுள்ள இந்த அரசுக்கு, தொடர்ந்து திட்டங்களைச் செயல்படுத்த **2023** தொலைநோக்குத் திட்டமே செயல் திட்டமாக அமையும். நாட்டிலேயே முதன்முறையாக, நிதி ஆதாரங்களை வகுத்து ஒருங்கிணைத்து திட்டங்களுக்குப் பயன்படுத்த அமைப்பு சார்ந்த வரைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. விரைவாக திட்டங்களைச் செயல்படுத்திட இவை வழி வகுக்கும்.

**14.** விவசாயிகளை மையமாகக் கொண்ட அணுகுமுறை மூலம் புதுமையான பல திட்டங்களைச் செயல்படுத்தி, இந்த அரசு வேளாண் மேம்பாட்டிற்காக தொடர்ந்து பாடுபடும். நவீன தொழில்நுட்பங்கள், பயிர் பலவகையாக்கல் முறையை விரிவாக்கம் செய்வதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து, உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவு அடையப்படும். இத்தொழில்நுட்பங்களின் வாயிலாக தொடர்ந்து வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயரவும், விவசாயிகளின் வருவாய் பெருகவும் வழிவகை செய்யப்படும். பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டம், நுண்ணீர்ப் பாசனத் திட்டங்கள் போன்ற, இந்த அரசால் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். விவசாய விளைபொருட்களுக்கு உரிய விலையினை விவசாயிகள் பெறுவதற்கு, சந்தைகளுடனான இணைப்பினை ஒருங்கிணைத்து செம்மைப்படுத்த, கூட்டுறவு வேளாண்

சந்தைகளையும், ஒழுங்குமுறை விற்பனை மையங்களையும் ஒருங்கிணைத்து கணினிமயமாக்கி, மின்னணு ஏல முறையினைப் பயன்படுத்த, அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள சந்தைகள் தேசிய அளவில் உள்ள வேளாண் விளைபொருட்களுக்கான சந்தைகளுடன் இணைக்கப்படும்.

**15.** கடந்த ஐந்து ஆண்டுகளில், கால்நடை பராமாரிப்புத் துறையில் இந்த அரசு செயல்படுத்திய எண்ணற்ற திட்டங்களால், தமிழகத்தில் விவசாயிகளின் வருவாயில் கால்நடை வளர்ப்பு மூலம் கிடைக்கும் வருவாயின் பங்கு கணிசமாக உயர்ந்துள்ளது. இந்நிலை தொடர, கால்நடை பராமரிப்புத் துறையின் மேம்பாட்டிற்கு இந்த அரசு தொடர்ந்து பெரும் முக்கியத்துவம் அளிக்கும். புதிய கால்நடை துணை மையங்கள் அமைத்தல், கால்நடை துணை மையங்களை மருந்தகங்களாகத் தரம் உயர்த்துதல் போன்ற கால்நடை பராமரிப்புத் துறைக்கான

கட்டமைப்பு வசதிகள் தேவைக்கேற்ப வலுப்படுத்தப்படும். கிராமங்களில் உள்ள ஏழை மகளிரின் வாழ்க்கைத் தரத்தில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்திய விலையில்லா கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்கும் முன்னோடித் திட்டங்கள் இந்த அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்படும். கால்நடை பராமரிப்புத் துறையில் சீரான, நீடித்த, நிலைத்த வளர்ச்சியை எய்திட, பால்வளத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

**16.** நீண்ட கடற்கரையைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதால், மீனவ மக்களின் வருமானத்தைப் பெருக்க, மீன்வளத் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது முக்கியத்துவம் பெறுகிறது. மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்துதல், புதிதாக மீன் இறங்கு தளங்களை அமைத்தல், குளிர்சாதன சேமிப்புக் கிடங்குகளை உருவாக்குதல் மற்றும் மீன் பதப்படுத்தும் இதர கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல்

போன்ற உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் தீவிரமாகச் செயல்படுத்தப்படும். மீன்பிடி தடைக் காலத்திலும், மீன்பிடி குறைவாக உள்ள காலங்களிலும், மீனவர்களின் நலனுக்காக வழங்கப்படும் உயர்த்தப்பட்ட உதவித்தொகை தொடர்ந்து வழங்கப்படும். சூரை மீன்பிடிப் படகுகள் மூலமாக ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க சிறப்பான கவனம் செலுத்தப்படும்.

17. பாரம்பரிய மீன்பிடிப்புப் பகுதிகளில் மீன்பிடிக்கும்போது, இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டு வரும் நிகழ்வுகள் மேலும் தொடராமலும், அவர்களின் உயிருக்கும் உடைமைக்குமான பாதுகாப்பையும், வாழ்வாதாரத்திற்கான உரிமையையும் உறுதிசெய்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நீண்டகாலப் பிரச்சினைக்கு இலங்கை அரசு மூலம் நிரந்தரத் தீர்வு காண, மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும். கச்சத்தீவை மீட்டு,

பாக் நீரிணைப்புப் பகுதியில் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிட, தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**18.** அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதில் உறுதியாக உள்ள இந்த அரசு, அனைவருக்கும் பயனளிக்கும் பொது விநியோகத் திட்டத்தை அமல்படுத்தும் கொள்கையை தொடர்ந்து கடைபிடிக்கும். பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டை சிறந்த முறையில் கண்காணிப்பதற்கு, அனைத்து செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்படும். விலைவாசியைக் கட்டுப்படுத்திட இந்த அரசு உருவாக்கிய முன்னோடித் திட்டங்களான 'பண்ணைப் பசுமைக் கடைகள்', 'அம்மா மருந்தகங்கள்', 'அம்மா உணவகங்கள்', 'அம்மா குடிநீர்', 'அம்மா சிமெண்ட்', 'அம்மா உப்பு' போன்ற திட்டங்கள் ஏழை எளிய மக்களையும், நடுத்தரக் குடும்பங்களையும்

விலைவாசி உயர்விலிருந்து பாதுகாத்துள்ளன. இந்த முன்முயற்சிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**19.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அயராத முயற்சிகளாலும், தனிக் கவனத்தாலும் தமிழகத்தை இன்று மின்மிகை மாநிலமாக உருவாக்கி, தமிழக வரலாற்றில் உன்னத சாதனையை இந்த அரசு நிகழ்த்தியுள்ளது. மின் நுகர்வின் மீது விதிக்கப்பட்டிருந்த அனைத்துத் தடைகளும் கடந்த **05–06–2015** முதல் விலக்கப்பட்டு, தடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மின்வெட்டு இல்லாத மாநிலமாக விளங்குவதையும், தரமான மின்சாரத்தை தொடர்ந்து வழங்குவதையும் இந்த அரசு உறுதி செய்யும். அடுத்த ஐந்து ஆண்டுகளில், **13,000** மெகாவாட் அனல் மின்திறனும், **3,000** மெகாவாட் சூரியஒளி மின்திறனும் கொண்ட அலகுகள் கூடுதலாக நிறுவப்பட்டு, தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரிக்கப்படும். தற்போது பணிகள் நடைபெற்று வரும்

மின் திட்டங்களை விரைவாக முடித்து, மாநிலத்தின் மின் உற்பத்தித் திறனை வெகுவாக உயர்த்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

**20.** தமிழ்நாட்டில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், விரிவுபடுத்தவும் இந்த அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, சீரான வாகனப் போக்குவரத்தை உறுதிசெய்ய, புறவழிச் சாலைகள், வெளிவட்டச் சாலைகள், விரைவுச் சாலைகள், மேம்பாலங்கள் போன்றவை அமைக்கப்படும். சாலைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக, 'ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமும்' (Comprehensive Road Infrastructure Development Programme), 'செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறையும்' (Performance Based Maintenance Contract) தொடர்ந்து செயல்படுத்தப்படும். உலக வங்கியின்

உதவியுடன், 5,171 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் ‘தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II’, தமிழகத்தின் சாலைக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த உதவும்.

**21.** கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பை வழங்குவதற்காக, ‘விலையில்லா வேட்டி சேலைகளை வழங்கும் திட்டத்தை’ இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். நெசவுத் தொழிலை பாரம்பரியமாக செய்துவரும் பகுதிகளில், வேலைவாய்ப்பு வசதிகளை அதிகரித்திட, புதிய ஜவுளித் தொகுப்புகளும் பட்டு ஜவுளிப் பூங்காக்களும் அமைக்கப்படும். கழிவுநீர் வெளியேற்றத்தை முற்றிலுமாக தடுக்கும் வகையில் (Zero Liquid Discharge), பொது சுத்திகரிப்பு நிலையங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தீவிர முயற்சிகள் எடுக்கப்படும்.

**22.** தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்புகளையும் பொது வசதிகளையும் மேலும் உயர்த்திட, ஊரகக் குடியிருப்புகளை மையமாகக் கொண்ட, ‘தமிழ்நாடு கிராமப்புற குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்’ (Tamil Nadu Village Habitation Improvement) தொடர்ந்து செயல்படுத்தப்படும். நிதி ஆணையத்தின் உதவி மானியங்களின் கீழ் ஊராட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கவுள்ள நிதி ஆதாரங்களிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**23.** இல்லந்தோறும் கழிப்பறை வசதியை ஏற்படுத்தி, திறந்தவெளியில் மலம் கழிக்கும் சுகாதாரமற்ற பழக்கத்தை தமிழ்நாட்டிலிருந்து முற்றிலும் ஒழிக்க, இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அனைத்து கிராமங்களிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பொது சுகாதாரம் மேலும் மேம்படுத்தப்படும். ‘தூய்மைக் காவலர்களை’ நியமித்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு

மேலாண்மைத் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு பல மாநிலங்கள் தற்போது பின்பற்றி வருகின்றன என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்மிகு தலைமையின் கீழ், குப்பைகள் அற்ற தூய்மையான கிராமங்களையும் நகரங்களையும் இந்த அரசு உருவாக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

**24.** அனைவரும் பொருளாதார முன்னேற்றம் அடைய, வங்கிச் சேவையை அளித்து, வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கான இணைப்பை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். 'தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின்' மூலமாக, 'புதுவாழ்வுத் திட்டத்தின்' உத்திகளை அனைத்து மாவட்டங்களிலும் பயன்படுத்தி, மாநிலத்தில் வறுமையைக் குறைக்க இந்த அரசு தொடர்ந்து தனது முயற்சிகளை மேற்கொள்ளும். கிராம மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, சுயஉதவிக் குழுக்கள், கிராமப்புற வறுமை ஒழிப்புக் குழுக்கள், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள்

மூலம் பெருமளவில் குறு தொழில்கள் (Micro enterprises) துவங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

**25.** நாட்டிலுள்ள பெரிய மாநிலங்களுள், மிக அதிகமாக நகரமயமான மாநிலமாக தமிழ்நாடு உள்ளதால், நகர்ப்புரக் கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்தி தரம் உயர்த்துவது அவசியமாகிறது. நகர்ப்புரங்களில் தரமான சாலை வசதிகள், மழைநீர் வடிகால்கள், திடக்கழிவு மேலாண்மை, கழிவுநீர் மேலாண்மை, தெரு விளக்குகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வரும் 'ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டு இயக்கமும்' (Integrated Urban Development Mission), 'சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கமும்' (Chennai Mega City Development

Mission) மத்திய அரசின் திட்டங்களான ‘திறன்மிகு நகரங்கள் திட்டம்’ (Smart cities) மற்றும் ‘அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டங்களுடன்’ (Atal Mission for Rejuvenation and Urban Transformation) ஒருங்கிணைக்கப்பட்டு, நகர்ப்புரக் கட்டமைப்பு வசதிகள் மேலும் மேம்படுத்தப்படும். நகர்ப்புர மேலாண்மைக்கு கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் ‘தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்காக’ (Tamil Nadu Sustainable Urban Development Programme) இந்த அரசு உலக வங்கியின் நிதியுதவியைப் பெற்றுள்ளது.

**26.** மாநிலத்தில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். கிராமப்புற, நகர்ப்புரப் பகுதிகளில் தொடர்ந்து அதிகரித்து வரும் குடிநீர்த் தேவையினை

பூர்த்தி செய்ய, புதிய குடிநீர் வழங்கும் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். சென்னைக்கு அருகே, நெம்மேலி மற்றும் பேரூரில் முறையே, நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் மற்றும் 400 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட இரண்டு கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை நிறுவுவதற்கான பணிகள் விரைவுபடுத்தப்படும்.

27. கோயம்பேடு மற்றும் ஆலந்தூருக்கு இடையே பயணிகள் சேவைகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தற்போது வழங்கி வருகிறது. சின்னமலைக்கும் விமான நிலையத்திற்கும் இடையேயும், ஆலந்தூருக்கும் பரங்கிமலைக்கும் இடையேயும் பயணிகள் சேவைகள் விரைவில் துவக்கி வைக்கப்பட உள்ளன. மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு, 2017 ஆம் ஆண்டு இறுதிக்குள், அனைத்துத் தடங்களிலும் முழுமையாக

பயணிகள் சேவைகள் தொடங்கப்படும். வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் வரையிலான மெட்ரோ இரயில் வழித்தடம்–I இன் நீட்டிப்புப் பணிகள் **3,770** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தும் வகையில், இந்த அரசு தனது தொடர் முயற்சிகளால் மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன. இதைத் தொடர்ந்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான பணிகளையும் இந்த அரசு விரைவாக செயல்படுத்த உறுதி கொண்டுள்ளது.

**28.** தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்குவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும், எளிதில் தொழில் தொடங்குவதற்கும் உரிய சூழலை தமிழகத்தில் ஏற்படுத்த, தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டின் முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு, 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் மூலம், 4,70,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 2,42,160 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளைப் பெற வழிவகை செய்ததன் மூலம், இந்த மாநாடு மகத்தான வெற்றியைக் கண்டது. ஒப்பந்தம் செய்யப்பட்ட திட்டங்கள் பலவற்றில், பணிகள் ஏற்கனவே துவங்கப்பட்டுள்ளன. இனிவரும் காலத்தில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை, இந்த அரசு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்த உள்ளது.

29. நோக்கியா மற்றும் அதற்கான உபபொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு புத்துயிர் அளிக்க இந்த அரசு தீவிரமான முயற்சிகளைச் செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அண்மையில் பாக்ஸ்கான் உள்ளிட்ட சர்வதேச

நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை தைவானுக்கு அனுப்பி வைத்தார்கள். மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள பிரச்சினைகளுக்கு, அந்த அரசின் மிக உயர்மட்ட அளவில் அணுகி சுமூகத் தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**30.** சென்னை–பெங்களூரு மற்றும் மதுரை–தூத்துக்குடி தொழில் வழித்தடங்கள் உட்பட்ட தொழில் மேம்பாட்டு வழித்தடங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சிக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கப்படும். சென்னை–பெங்களூரு தொழில் வழித்தடத் திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாக, பொன்னேரியை துடிப்பான தொழில் முனையமாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டவாறு, மாநில அரசுக்கான நிதி ஆதாரங்களைப் பெருக்க, புதிய கிரானைட் கொள்கையை வகுக்கவும், தாது மணல்

விற்பனையை நேரடியாக அரசே ஏற்று நடத்தவும் இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**31.** தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், அமைப்பு சார்ந்த பிரிவில் (Organized Sector), கணிசமான அளவில் வேலைவாய்ப்பை அளித்து வருகிறது. தொழில் துறையின் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, இந்தத் துறையில், நாட்டிலேயே அதிகமான தொழிற்சாலைகளும் அதிகமான தொழிலாளர்களும் தமிழ்நாட்டில்தான் உள்ளனர். புதிய தொழில் முனைவோர்களையும், புதுமையான தொழில் முயற்சிகளையும் ஊக்குவிப்பதற்காக தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, 'புதிய தொழில் முனைவோர்–தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்' (New Entrepreneur-cum-Enterprise Development Scheme) மூலம் நிதியுதவி வழங்கப்படும். தொழில் முனைவோர் அமைப்புகள் தனியாகவோ அல்லது சிட்கோவுடன் இணைந்தோ

புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கான நிதியுதவிகள் வழங்கும் இந்த அரசின் கொள்கை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**32.** குடிசைகளற்ற கிராமங்களையும், குடிசைப் பகுதிகளற்ற நகரங்களையும் உருவாக்குவதே இந்த அரசின் தொலைநோக்குக் கொள்கையாகும். தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் நோக்குடன், தமிழகத்தில் வீட்டுவசதியை மேம்படுத்த, மத்திய மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து வீட்டுவசதி வழங்கும் ஒரு இயக்கத்தை இந்த அரசு செயல்படுத்தும்.

**33.** ஏழை மக்களும் மருத்துவ வசதிகளை எளிதாகப் பெறுவதை உறுதி செய்வதற்காக, மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்படும். இதற்காக, தேவையான இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்தல், ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துதல்,

வட்ட மற்றும் மாவட்ட அளவிலான மருத்துவமனைகளை தரம் உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இந்த அரசின் இலட்சியத் திட்டமான 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்' மூலமாக, ஏழை எளிய மக்கள் தரமான மருத்துவ சிகிச்சை வசதிகளை, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பெற்று வருகின்றனர். இத்திட்டம் மக்களின் நலன் காக்க தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**34.** கல்வி மேம்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டும் முக்கியத்துவமும், சமுதாயத்தில் ஆசிரியர்கள் ஆற்றும் நற்பணியின் மீது அவர் கொண்டுள்ள நன்மதிப்பும், அவர் சமீபத்தில் தனது ஆசிரியையிடம் காட்டிய மரியாதையிலிருந்தே வெளிப்படுகிறது. இந்த உணர்வுடன்தான் தமிழ்நாட்டில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா மடிக்கணினிகள், உயர் கல்வியில் இடைநிற்றலைத்

தடுப்பதற்காக சிறப்பு ஊக்கத் தொகை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பைகள் போன்ற கல்வி உபகரணங்கள், நான்கு சீருடைத் தொகுப்புகள், காலணிகள், பேருந்து கட்டணச் சலுகைகள், மிதிவண்டிகள் போன்ற திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். 'குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை', உண்மை உணர்வுடன் இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.

**35.** ஏழை எளிய மக்களும் உயர்கல்வியை தடையின்றி அணுகி பயில்வதற்காகவும், உயர்கல்வியின் தரத்தை தமிழ்நாட்டில் உயர்த்துவதற்காகவும், உயர்கல்வியில் நாட்டிலேயே உயர்ந்த சேர்க்கை விகிதம் கொண்ட மாநிலம் என்ற சிறப்பு நிலையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவும், இந்த அரசு தேவையான பகுதிகளில் புதிய கல்லூரிகளை அமைத்து, உயர்கல்விக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த

அனைத்து முயற்சிகளையும் செய்யும். தகுதியுள்ள அனைவரும் உயர்கல்வி பயில நிதியுதவி அளிக்கும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தைத் திரும்ப வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். வேலை பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெருக்க, தொழில் நிறுவனங்களுடன் இணைந்து திறன் மேம்பாடு சார்ந்த பயிற்சிகளை மாணவர்கள் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**36.** தேசிய அளவிலான பொது நுழைவுத் தேர்வின் (National Eligibility-cum-Entrance Test) மூலமாக மட்டுமே மருத்துவக் கல்லூரிகள் மாணவர்களை சேர்க்க முடியும் என்ற உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவால், தமிழக மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பெருத்த பாதிப்புகளை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகளுக்கான சேர்க்கைக்கு, தற்போது மாநில அரசு பின்பற்றி வரும் வெளிப்படையான

நியாயமான முறையே தொடர்வதற்காக இந்த அரசு தொடர்ந்து பாடுபடும். பொது நுழைவுத் தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு நிரந்தர விலக்கு அளிக்கத் தேவையான சட்ட வரைமுறையை மத்திய அரசு மூலம் இயற்றுவதற்காக இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கும்.

**37.** மகளிர், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், முதியோர், ஆதரவற்றோர் போன்ற சமூகத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்வது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கமாகும். இது, திருமண உதவித் திட்டங்களின் கீழ் திருமாங்கல்யத்திற்குத் தங்கம் வழங்கும் திட்டம், தொட்டில் குழந்தை திட்டம், சமூகப் பாதுகாப்பிற்காக வழங்கப்படும் ஓய்வூதியங்கள், முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு இல்லங்கள் போன்ற பல்வேறு சமூகப் பாதுகாப்புத்

திட்டங்களின் மூலம் தெளிவாகிறது. பெண்களுக்கு உரிய அதிகாரம் அளிப்பதற்கான ஒரு முன்னோடி முயற்சியாக, உள்ளாட்சி அமைப்புகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளில், பெண்களுக்கான ஒதுக்கீட்டை **50** சதவீதமாக உயர்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**38.** தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளிக்கப்பட்டு வருவதால், அவர்கள் தடையின்றி உயர்கல்வி பயில வழிவகை ஏற்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய **1,167** கோடி ரூபாய் நிதியுதவி நிலுவையில் இருப்பதால், அதனை விரைவில் தமிழ்நாட்டிற்கு விடுவிக்குமாறு நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மாணவர்கள் கல்வி கற்பதற்கான நல்ல சூழலை உருவாக்குவதற்காக,

ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கிவரும் அனைத்துப் பள்ளிகளிலும், விடுதிகளிலும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்படும். ஆதி திராவிட மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக, தகுதிபெற்ற நபர்களுக்கு நிதியுதவியும் ஊக்கமும் தொடர்ந்து அளிக்கப்படும்.

**39.** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்களின் நலனுக்காக, தேவையான வசதிகளுடன் விடுதிகள் அமைக்க இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கும். இம்மாணவர்கள் கல்வி பயில்வதற்காக, கல்வி உதவித்தொகையும், உணவு உதவித்தொகையும் இப்பிரிவினரின் பொருளாதார வளர்ச்சிக்காக, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக

நிதியுதவியும் தொடர்ந்து அளிக்கப்படும். சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பிற்காகவும், வளர்ச்சிக்காகவும் இந்த அரசு தொடர்ந்து நலத்திட்டங்களைச் செயல்படுத்தும்.

**40.** புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசின் பல்வேறு கொள்கைகளையும் முன்முயற்சிகளையும் நான் இங்கு கோடிட்டுக் காட்டியுள்ளேன். மாநிலத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையக்கூடிய வகையில் சமூக பொருளாதார வளர்ச்சி பெற இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறமையான தலைமையின் கீழ் இயங்கி வரும் இந்த அரசு, மற்ற மாநிலங்களை விஞ்சி, வெற்றியின் உச்சத்திற்கு தமிழ்நாட்டைக் கொண்டு செல்லும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**41.** ஆக்கப்பூர்வமான, ஆரோக்கியமான விவாதங்கள் மூலம் மக்களாட்சியின் மாண்பினை அதன் உச்சத்திற்கு எடுத்துச் செல்லும் மாபெரும் பொறுப்பு

இந்த மாமன்றத்திற்கு உண்டு. இதனை மனதில் கொண்டு, இந்தப் பேரவை பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து விவாதங்கள் செய்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான முன்னோடி கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கும் என நான் நம்புகிறேன். மாநில மக்களின் எதிர்பார்ப்புகளையும் கனவுகளையும் நிறைவு செய்ய மேற்கொள்ளும் முயற்சிகளில் நீங்கள் வெற்றிபெற எனது வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**